**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 02.02.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆச்சார்யா என்ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகம் குண்டூர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதுகலை மாணவர்களின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக 02.02.2023 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர் மற்றும் ஆச்சார்யா என். ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகம் , குண்டூர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. ஆந்திர பிரதேசம் குண்டூரில் உள்ள ஆச்சார்யா என் . ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் , முனைவர் விஷ்ணுவர்தன் ரெட்டி , துணைவேந்தர் மற்றும் முனைவர் ஜி . ராமா ராவ் , பதிவாளர் ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தனர்.

முதுகலை பட்டமேற்படிப்பு பயிலகத்தின் உதவி பேராசிரியை முனைவர் ஜி. வனிதா வரவேற்றார். கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதன்மையர் (முதுகலை பட்டமேற்படி ப்பு பயிலகம் ) முனைவர் ந . செந்தில் தனது அறிமுக உரையில் , இந்தக் கல்விக் கூட்டுறவின் இன்றியமையாமை பற்றிக் குறிப்பிட்டார் . அதிகாரிகள், முனைவர் இரா. தமிழ்வேந்தன், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர் மற்றும் முனைவர் ஜி . ராமா ராவ் , பதிவாளர், ஆச்சார்யா என் . ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகம் , குண்டூர் ஆகியோர் முனைவர் வெ .கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் முனைவர் விஷ்ணுவர்தன் ரெட்டி , துணைவேந்தர், ஆச்சார்யா என் . ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழ கம், குண்டூர் முன்னிலையில் மாணவர்களின் நலனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பல்கலைக்கழக அதிகாரிகளான , முனைவர் ஆர். ரவிகேசவன், இயக்குனர் (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம் ), முனைவர் எம் . கே. கலாராணி, இயக்குனர் (பயிர்மேலாண்மை), முனைவர் பி . ஜெயக்குமார், இயக்குனர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ), முனைவர் எம் . ரவீந்திரன், இயக்குனர் (ஆராய்ச்சி), முனைவர் வி . பாலசுப்ரமணி, தேர்வுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் முனைவர் கே .என். கணேசன், பேராசிரியர் மற்றும் தலைவர் , தீவனப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியோர் கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர் . முனைவர் என் .ஓ. கோபால், பேராசிரியர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர் அவர்களின் நிறைவுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*